5th November 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தமிழையே பயன்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் வலியுறுத்தவில்லை. அங்கே நம்முடைய நாட்டு தேசிய மொழிகள் பயன்படுத்தப்படும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது. கனம் அங்கத்தினருக்கு இது தெரிந்திருக்கும். இதை மத்திய சர்விஸ் கமிஷன் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தமிழிலும் எழுதலாம் என்ற விதி வகுத்து விட்டு தமிழிலே தேர்வு எழுதிவிட்டு உத்தியோகத்திற்குச் சென்ற பிறகு வேறு மொழியிலே ஆட்சி நடத்தவேண்டியிருக்கிற காரணத்தால் தேர்வு எழுதக் கூடியவர்கள் தமிழை எடுத்துக் கொள்ளமாட்டார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரிகிறதா? ஆகையால், ஆட்சி மொழித்திட்டத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்திற்குத் தெரிவது தெரிகிறது. உத்தியோகத்தை நாடுபவர்களுக்கும் என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும்.

திரு. செ. மாதவன் : மெட்ராஸ் பப்ளிக் சர்விஸ் கமிஷன் நடத்தக்கூடிய தேர்வுகளிலே அனைத்திலும் தமிழையே பயன்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா அல்லது ஆப்ஷனலாகத் தமிழை எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசாங்கத்திற்கும் இந்த அரசாங்கத்திற்கும் தொடர்பு வேண்டியிருக்கிறது. ஆகையால் இந்தியுடன் ஆங்கிலமும் தேவை என்று சொல்லியிருக்கிறோம். ஆங்கிலம் இல்லாவிட்டால் வேலைகளைச் சரிவர செய்ய முடியாது. மத்திய அரசாங்கத்திலும் 14 மொழிகளும் சர்க்கார் ஆட்சி மொழியாகக் கருதப்பட வேண்டுமென்றால் உத்தியோகத்திற்குப் பரீட்சை எழுதக்கூடியவர்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் கட்டாயமாகப் பரீட்சை எழுதவேண்டுமென்று யோசனை இருப்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும்.

* 289 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சென்னை பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வுகளுக்கு விண்ணப்பம் செய்யும் மிக பின்தங்கிய வகுப்பினருக்கு தனி சலுகைகள் அளிப்பதற்கு விதிகளில் மாற்றம் செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. து. ப. அழகமுத்து : மிகப்பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அரிஜனங்களுக்குக் கொடுப்பதுபோன்ற சலுகைகள் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[5th November 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மிகப் பின்தங்கிய வகுப்பினர் களுக்கும் சலுகை இருக்கிறது, அரிஜனங்களுக்கும் சலுகை இருக் கிறது. வயது போன்றவைகளில் சலுகை இருக்கிறது. எத்தனை பேர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதிலும் சலுகைகள் இருக்கின்றன. ஆனால், பரீட்சையில் வித்தியாசம் கிடையாது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கம் வெளியிடும் பட்டியலிலே மிகப் பின்தங்கிய வகுப்பினர் என்று பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மிகப் பின்தங்கிய வகுப்பினரை அரிஜனங்கள் பட்டியலுடன் இணைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : விண்ணப்பத்திலே தேர்வுக்குத் தகுதி நிர் ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தேர்விலே மார்க் போன்ற சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சலுகைகள் மிகப் பின்தங்கிய வகுப்பினருக்கும் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விண்ணப்பம் செய்துகொள் வதிலே மட்டும் சலுகை இருக்கிறது. ஆனால் பரீட்சை எழுது வதில் வித்தியாசம் இல்லை.

Bus service between Madras and Ranipet

* 290 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to ply two buses between Madras and Ranipet in North Arcot district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

ராணிப்பேட்டையில் எக்ஸ்பிரஸ் பஸ்கள் நிறுத்தல்

■ 291 கேள்வி—திரு. ஆர். அப்துல் கனீல்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா:—

(அ) ராணிப்பேட்டை வழியாகச் செல்லும் எக்ஸ்பிரஸ் பஸ் கள் அங்கு நிறுத்தப்படாமல் செல்வது அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Representations have been received requesting that Ranipet may be made a stopping place for the State Transport buses plying on the routes from Madras to Coimbatore and from Madras to Bangalore and for the private buses plying on the route from Madras to Vellore.

(*b*) The request is under consideration.